# 13C உருக்காட்டல், கலந்துரையாடல் மற்றும் ஆழமான பகுப்பாய்வு

1. துணையியல் 3 பகுதி Aயிலுள்ள "ஐரோப்பாவில் பா.மொ.க வின் மாதிரிகள்" என்பதை தயவுசெய்து மீளாய்வு செய்க. நான் தற்போது வாழ்கின்ற, வேலை செய்கின்ற நாட்டில் அல்லது நகரத்தில் உள்ள பா.மொ.க நிலைமைக்குப் பொருந்தும் மாதிரி யாது என்பதை ஆராய்ந்து கலந்துரையாடுக?

2. நீங்கள் தற்போது வாழ்கின்ற, பணிசெய்யும் நாட்டில் பா.மொ.க சூழ்நிலையில் நீங்கள் கருதும் நேர்மறையானது எது?

3. நீங்கள் தற்போது வாழ்கின்ற, பணிசெய்யும் நாட்டில் அல்லது நகரில் பா.மொ.க சூழ்நிலை தொடர்பாக நீங்கள் கருத்திற்கொள்ளும் எதிர்மறை, மனநிறைவற்ற, அல்லது முன்னேற்ற வழியாகக் கொள்ளக்கூடிய நிலைகள் யாவை? தயவுசெய்து மிக விரிவான குறிப்புகளின் பட்டியலை தொகுக்கவும்.

4. உங்கள் பட்டியலில் உள்ள தனிப்பட்ட குறிப்புகளை முன்னேற்றுவதற்கான அளவீடுகளைக் கருத்தில் கொள்ளல்: எழுப்பப்பட்ட குறிப்புகள் தொடர்பாக யார் / எந்த நிறுவனம் பொறுப்புடையவர் / பொறுப்புடையது? அவர்களை முன்னேற்ற எவ்வாறு ஊக்கப்படுத்தலாம்?

5. முன்னேற்றத்தின் வாய்ப்புகள் குறித்துப் பெரும்பான் மையான தீர்வுகள், கலந்துரையாடல்கள் உயர் ஒருங்கிணைப்பு அரசியல் அல்லது அரச மட்டங்களிலே ஏற்படுகின்றன, இவ்வேளையில் ஒரு தனிப்பட்ட ஆசிரியர் அரிதாகவே செல்வாக்குச் செலுத்தமுடியும். இருப்பினும், அதில் சிலவற்றைத் தொடக்கி வைக்கும் நடைமுறைத் தடங்களை மற்றும் வழிகளை தயவுசெய்து கருத்திற்கொள்க.

6. உயர்ஒருங்கிணைப்பு மட்டங்களிலே தீர்க்கப்படக்கூடிய சிக்கல் சூழ்நிலைகளைச் சற்று ஒதுக்கி வைப்பின், நீங்கள் அல்லது உங்கள் தொழில்சார் தோழர்கள் தீர்க்கக்கூடிய அல்லது தீர்க்க உதவக்கூடிய அடிக்கடி ஏற்படும் சிறிய சிக்கல்கள் உள்ளன. இரண்டு அல்லது மூன்று அத்தகைய சிறிய "முன்னேற்ற சூழல்கள்" அவ-ற்றைக் கையாள முடியுமான குறிப்பிட்ட வாய்ப்புகளைக் கருத்திற்கொள்க.

7. அத்தியாயம் 13 B யில் விபரிக்கப்பட்டுள்ளதன்படி ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுவது கவர்ச்சி உள்ளதாக இருக்கலாம். நீங்கள் எவ்வாறு அதனைப் பரிமாற்றம் செய்ய முடியும் எனவும் ஏனைய நாடுகளிலுள்ள உங்கள் தொழில்சார் தோழர்களின் நிலைப்பாடுகள் பற்றி (தனிப்படவோ அல்லது இலத்திரனியலூடாகவோ) அறிவதற்கான வழிகள் பற்றிக் கலந்துரையாடி விவாதிக்கலாம்.